[1971 டிசம்பர் 6

திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் ஹங்கேரி போன்ற சோஷலிஸ நாடுகளுக்கு, இன்னும் பல முன்னேற்றகரமான நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் பார்த்த சில விஷயங்களையும்-நம் தமிழ்நாட்டிற்கு எந்த முறையில் பொதுத்துறையில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்பது போன்ற விஷயங்கள் பற்றி ஓர் அறிக்கையை இந்தச் சபைக்கு சமர்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரமாக கேள்விகளுக்கு பதில் சொல்ல வாய்ப்பு இக்கிற காரணத்தினால் ஓர் அறிக்கை தேவை இல்லை. ஹங்கேரியில் அந்த நாட்டு தொழில் அமைச்சர் அவர்களுடன் விவாதிக்கப்பட்டது. ரசாயனத் தொழிற்சாலை, குறிப்பாக மருந்து உற்பத்தித் தொழிற்சாலைக்கு நம் தமிழ்நாட்டில் வந்து ஆராய்ச்சி செய்து அவற்றைத் தொடங்குவதற்கு விருப்பத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 16 கேள்விகள் இருக்கின்றன. ஆனால் கேள்வி நேரம் இன்னும் எட்டு நிமிடங்கள்தான் இருக்கிறது. இவ்விதம் துணைக்கேள்விகள் கேட்கத் தொடங்கினால் இன்னும் இரண்டு மணி நேரம் கேள்வி நேரத்திற்காக நீட்டிக்க வேண்டிவரும். எனவே, முக்கியமான கேள்விகளுக்கு துணைக் கேள்விகள் கேட்பது என்ற முறையை அனுசரித்து மூலக் கேள்வி கேட்டவர்களுக்கு மட்டும் ஒன்றிரண்டு துணைக் கேள்விகள் என்ற முறையில் நாம் வேகமாகச் செல்லலாம் என்று கருதுகிறேன்.

* 110 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிய தொழில்கள் தொடங்க லைசென்ஸ் முறைகளை ரத்து செய்ய வேண்டி நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் தொடங்குவதற்கு இந்த லைசென்ஸிங் முறை பல நேரங்களில் இடையூறாக இருப்பதாக கருதப்படுவதால் அதை நீக்குவதற்காகவாவது அல்லது அதிலுள்ள சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகவாவது இனி மேலாவது நமது அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முழுவதும் ரத்து செய்ய வேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் இல்லை என்று சொன்னேன். நமது அரசு தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாக மத்திய அரசு ஒரு புதிய கொள்

1971 டிசம்பர் 6]

கையை அறிவித்து ஒரு கோடி வரையில் லைசென்ஸ் தேவை இல்லை என்று சொல்லியிருக்கிருர்கள். அதிலே இறக்குமதி என்று வெளி நாட்டுச் செலாவணி வந்தால் மத்திய அரசின் அனுமதி தேவை என்றிருக்கிறது. அதையும் அதிகப்படுத்தி 20 லட்சம் வரையில் இறக்குமதிக்கு வெளிநாட்டுச் செலாவணி தேவைப்பட்டால் அவைகளுக்கு லைசென்ஸ் தேவை இல்லை என்று அறிவிக்கவேண்டும் என்று நம் அரசு வற்புறுத்தியிருக்கிறது. இன்னும் பல ஆலோசனைகள், தொழிற்சாலைகளை விரைவில் தொடங்க ஊக்கம் தரும் வண்ணம் இந்தக் கொள்கை அமல்படுத்தப்பட வேண்டும். காலதாமதத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது என்றெல்லாம் வலியுறுத்தி வருகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Is this limit of Rs. 1 crore extended to Rs. 5 crores now, if there is no foreign exchange involved? That is, whether the State Government can give licences or permission to start industries with a capital of Rs. 5 crores if foreign exchange is not involved?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு கோடி பொறுத்த வரையில் 10 சதவீதம் தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து கோடி என்பது இருக்கமுடியாது.

செங்கல் உற்பத்திச்சாலை துவக்கக் கடன்கள்

* 111 வினு—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

செங்கல் தொழிற்சாலைகள் துவக்குவதற்குக் கொடுத்து வந்த கடன் உதவி தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாட்டு செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு கடன் கொடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது. இயந்திரம் மூலம் செங்கல் தயாரிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை கடனுதவி பெற தகுதி பெற்றவைகளா யுள்ளன.

திரு. பி. எஸ். மணியன்: நாட்டுச் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு கடன் கொடுப்பது என்பது நிறுத்தப்பட்டு விட்டது. அந்தத் தொழிற்சாலைகள் கிராமப்புறங்களில் குடிசைத் தொழில்கள் வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படுகிற காரணத்தினுல் அதுகுறித்து மறுபரிசீலனை செய்து கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இயந்திரச் சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்தால் நல்ல செங்கல் விரைவாக, ஏராளமாக, செலவைக் குறைத்து உற்பத்தி செய்யப்படும் என்ற காரணத்தினுல் இந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது.